# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016-17

## மானியக் கோரிக்கை எண்.53


**எஸ். பி. வேலுமணி**

**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி**
**மற்றும்**
**சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்**



©
தமிழ் நாடு அரசு
2016

## சிறப்புத்  திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2016-17

### பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–4 |
| 2. | துறையின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் | 4–7 |
| 3. | கண்காணிப்பு | 8–22 |
| 4. | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 22–34 |
| 5. | முடிவுரை | 35–37 |
| 6. | இணைப்பு | |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு 2016-17

## 1. முன்னுரை

நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்குவதே தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன் நோக்கமாகும். மேலும், தமிழகத்தை வறுமை இல்லாத மற்றும் பொதுமக்களின் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தை அளிக்கக்கூடிய வளமான மற்றும் முன்னேற்றமான மாநிலமாகவும் இத்தொலை நோக்குத் திட்டம் கருதுகிறது.

சமூகத்தின் பல்வேறு பிரிவினர்கள், குறிப்பாக பின்தங்கிய மற்றும் நலிந்த பிரிவினர்களின் உள்ளடங்கிய வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வரும் ஏராளமான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்டன. மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும்

அவர்களின் நல்வாழ்விற்காகவும் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப இடைவெளியைக் குறைப்பதற்காக மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல், மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி வழங்குதல், ஏழைகளின் பொருளாதார நிலையை மேம்படுத்த அவர்களுக்கு கறவைப்பசு / வெள்ளாடு / செம்மறியாடுகள் வழங்குதல் மற்றும் ஏழைப்பெண்களின் திருமணத்திற்காகவும் உயர்கல்வியினை தொடர்வதற்கு ஏதுவாகவும் அவர்களுக்கு திருமண நிதியுதவியுடன் “திருமாங்கல்யத்திற்கு” 8 கிராம் தங்க நாணயம்

வழங்குதல் போன்றவை இந்த அரசின் குறிப்பிடத்தக்க முதன்மைத் திட்டங்கள் ஆகும்.

ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான சகாப்தத்தை ஏற்படுத்துவதற்காக பன்முகச் சிறப்புத் திட்டங்கள் இந்த அரசின் முயற்சியால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மை, எரிசக்தி, குடிநீர், கல்வி, நல்வாழ்வு, ஊரக வளர்ச்சி, தொழில் மற்றும் உள்கட்டமைப்பு போன்ற முக்கிய இனங்களில் நிலையான மற்றும் சீரான வளர்ச்சியை எய்திட தொடர்புடைய துறைகளுடன் இணைந்து இத்துறை செயல்படுகிறது.

அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை ஒருங்கிணைக்கப் படுவதையும் மற்றும் கண்காணிக்கப் படுவதையும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு சிறப்புத் திட்டச் செயலாக்கத்

துறையினை அரசு உருவாக்கி உள்ளது. சிறப்புத் திட்டங்களின் பயன்கள் தேவைப்படுகின்ற மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்யப்படுவதையும் திட்டங்கள் விரைவாகவும், பயனுள்ளதாகவும் செயல்படுத்தப்படுவதையும் இத்துறையின் முக்கிய குறிக்கோளாகும். சிறப்பாக செயல்படுத்துவதற்கான முயற்சியில், இத்துறை பங்கேற்பாளர்கள் அனைவரையும் மற்றும் தொடர்புடைய துறைகளையும் இத்துறை ஈடுபடுத்துகிறது.

## 2. துறையின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்:

**2.1** தமிழ்நாடு அரசின் கொள்கைகள், பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக பின்வரும் பொறுப்புகள்

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:–

❖ அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.

❖ கள ஆய்வுகள் மேற்கொள்ளுதல், மண்டல மற்றும் மாவட்ட அளவில் திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டங்கள் நடத்துதல் மற்றும் திட்டச் செயலாக்கத்தில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைவதற்குப் பரிந்துரைத்தல்.

❖ திட்டங்களின் தரம் மற்றும் அளவீடு போன்ற அம்சங்கள் குறித்து அரசுக்குத் தேவையான குறிப்புகள் வழங்குதல் மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைத்தல் .

- ❖ மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகளை (கள ஆய்வு மற்றும் ஆய்வறிக்கைகளின் அடிப்படையில்) தொகுத்து, கொள்கை அளவில் திருத்தங்கள் தேவைப்படும் இனங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தலைமைச் செயலாளர் வழியாக அறிக்கையாக சமர்ப்பித்தல்.

- ❖ வழங்கப்படும் சேவையின் தரத்தினை உயர்த்துவதற்கு, பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு திட்டங்களின் வழிகாட்டி நெறிமுறைகளில் தற்போதைய நிலைக்கேற்ப திருத்தங்கள் மேற்கொள்ள பரிந்துரைத்தல்.

- ❖ தொழில்நுட்ப மாற்றங்களைக் கருத்திற்கொண்டு கூர்ந்தாய்வு மூலம் திட்டங்கள் சீரமைத்தல், நடைமுறையை

எளிதாக மேம்படுத்துதல், அரசு நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு வழிவகை செய்தல்.

- அரசுக்குத் தேவையான சிறப்பு அறிக்கைகளைத் தயாரித்து அளித்தல்.

**2.2** அரசின் திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றபடுவதை உறுதி செய்ய விழிப்புடன் கூடிய திறமையான ஆய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்பினை பிரத்யேகமாக தலைமைச் செயலகத்தில் அரசு ஏற்படுத்தியுள்ளது. ஏராளமான திட்டங்களைக் கண்காணிப்பது ஒரு மாபெரும் பணியாகும். இதனை நிறைவேற்றுவதற்காக மாவட்ட அளவில் காலமுறை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்வதற்கு அரசின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 3. கண்காணிப்பு:

**3.1** கண்காணிப்பு என்பது ஒரு முக்கியமான செயலாகும். ஏனெனில், இன்றைய நிலைக்கேற்ப விவரங்களைத் தொடர்ந்து பராமரிப்பதில் முக்கியப் பங்கினை வகிப்பதுடன் திட்டங்கள் திறமையாக நிறைவேற்றப்படுவதற்கு ஒரு உள்தணிக்கை செயல்பாடு போன்றதொரு பணியையும் மேற்கொள்கிறது. கண்காணிப்பு ஒரு திட்டத்தின் முன்னேற்றம் குறித்து அதன் ஆரம்ப கட்ட நிலையிலேயே அரசுக்கு முதன்மையாக வழங்குகிறது. திட்டங்களின் பயன்கள் சென்றடைவதை சீர்படுத்துவதற்கு உதவுவதோடு திட்டங்கள் தொடர்வதற்கான ஆதாரங்கள் அளிப்பதற்கும் கண்காணிப்பு இன்றியமையாதது.

திட்டம் உரிய மக்களுக்கு பொருத்தமானதுதானா என்பதை அறியவும், அதனைச் செயல்படுத்துவதில் கள அளவில்

உள்ள இடர்ப்பாடுகளைக் கண்டறியவும் மற்றும் அதன் சிறப்புத் தன்மைகள் குறித்தும் கண்காணிப்பு அத்தியாவசியமான கருத்துக்களை வழங்குகிறது. மேலும், திட்டத்தின் முன்னேற்றம் குறித்து நிர்ணயிக்கப்பட்ட காலஅளவில் மதிப்பீடு செய்வதற்கு கண்காணிப்புப் பணி உதவுகிறது. திட்டங்கள் செயல்படுத்தப்படும்போதே அவற்றின் முன்னேற்றம் குறித்த விவரங்களை முறையாக சேகரிக்கவும் அதனைப் பகுப்பாய்வதற்கும் தொடர் கண்காணிப்பு வழிவகை செய்கிறது.

இத்துறையின் கண்காணிப்பு, திட்டங்கள் சரியான பாதையில் செயல்படுத்தப் படுகின்றனவா, நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி திட்டங்களில் முன்னேற்றம் உள்ளனவா மற்றும் எந்தெந்த இனங்களில் முன்னேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை

கண்டறிவதிலும் நுட்பமான தகவல்களை அனைத்துத் துறைகளுக்கு வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

பல்வேறு அரசின் திட்டங்கள் குறிப்பாக முதன்மைத் திட்டங்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் பலன்களை சிறப்புடன் நிர்வகிக்கும் பொருட்டு பல்வேறு துறைகளின் செயல்திறன்களை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிக்கிறது.

## 3.2 அரசின் சிறப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்:

ஏழ்மையிலும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களின் மேம்பாட்டுக்காகவும், மக்களின் நீண்டநாள் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டும் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணிக்கும் பொறுப்பு, சிறப்புத் திட்டச்

செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், பிற துறைகளிடமிருந்து காலமுறையிலான முன்னேற்ற விவரங்களைச் சேகரிப்பதற்கு உரிய தகவல் தொழில்நுட்பங்களைக் கொண்டு, முழுமையான உடன்நிகழ் (on-line) அமைப்பினை இத்துறை உருவாக்கி உள்ளது.

**3.3 செயல்திறன்மிக்க கண்காணிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட நுட்பங்கள்:**

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முழுமையான கண்காணிப்பு அமைப்பினை உறுதி செய்வதற்காக பின்வரும் வழிமுறைகளை வகுத்துள்ளது:–

**(அ) அறிவிப்புகளைக் கண்காணித்தல்:**

சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் உரை மற்றும் நிதிநிலை அறிக்கையில் உள்ள அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி **110–**ன்

கீழ் அறிவிக்கப்படும் அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் அறிவிக்கப்படும் அறிவிப்புகள் மற்றும் இதர நிகழ்வுகளில் அறிவிக்கப்படும் அறிவிப்புகளின் முன்னேற்றங்களை இத்துறை கூர்ந்து கண்காணிக்கிறது. மேலும், சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர்களால் அறிவிக்கப்படும் அறிவிப்புகளையும் இத்துறை கண்காணிக்கின்றது.

இந்த அறிவிப்புகளின் முன்னேற்றங்களை தொடர்புடைய துறைகளுடன் இணைந்து இத்துறை கூர்ந்து கண்காணிக்கிறது. மேலும், தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்படும் 'அனைத்துச் செயலாளர்கள் கூட்டத்தில்' ஆய்வு செய்யப்படுகிறது மற்றும் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை, அறிவிப்புகளின் முன்னேற்ற அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு

சமர்ப்பிக்கப்படுகிறது. அறிவிப்புகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக இத்துறையால் உருவாக்கப்பட்ட மென்பொருள், தலைமைச் செயலகத்தின் உள்வலையதளத்தில் (intranet) நிறுவப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளும் அறிவிப்புகளின் நிலையினை உடன்நிகழ் (online) முறையில் அவ்வப்போது பதிவு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசின் ஒவ்வொரு துறைகளால் தங்களின் துறைத்தலைவர்களைத் தொடர்பு கொள்வதற்கும், அறிவிப்புகளின் நிலையினை உடனுக்குடன் பதிவு செய்வதற்காகவும் தொடர்பு அலுவலர்களை நியமித்துள்ளன.

பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டு மற்றும் அறிவிப்புகளின் முன்னேற்றங்கள் வகைப்படுத்தப்பட்டு காலமுறை அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு

தொகுக்கப்பட்ட அறிக்கைகள் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களில் பயன்படுத்தப் படுகின்றன.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு பணியின் மூலம் ஒதுக்கீட்டினை அதிகப்படுத்தவும், விரிவுபடுத்தவும் அல்லது புதிய திட்டங்களாக அறிமுகப்படுத்துவதற்கும் அல்லது நடைமுறையில் உள்ள திட்டங்களில் மாற்றங்களைச் செய்வதற்கும் முக்கிய விவரங்களை வழங்குகிறது.

**(ஆ) அரசின் முதன்மைத் திட்டங்களைக் கண்காணித்தல்:**

கிராமப்புற ஏழை மக்களின் வருமானத்தை உயர்த்துதல் மற்றும் அதன் வாயிலாக அவர்களின் வாழ்வாதாரத்தை ஏற்படுத்திட கறவைப்பசு, வெள்ளாடு/செம்மறி ஆடுகள் வழங்குதல், தகவல் தொழில்நுட்பத்திறன் இடைவெளியைக்

குறைப்பதற்காக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல், ஏழைகளின் நல்வாழ்வினைப் பாதுகாத்திட முழுமையான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கருவுற்ற பெண்களுக்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், தேவையுள்ள ஏழை மற்றும் நலிவடைந்த மகளிருக்கு பல்வேறு திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குதல் மற்றும் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் போன்ற முதன்மைத் திட்டங்கள் இந்த அரசின் புரட்சிகரமான நடவடிக்கைகள் ஆகும். பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்ற இத்திட்டங்களை, இணைந்து கண்காணிக்கும் பணி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம்

ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகளைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு துறைகளிடமிருந்து இத்துறை சேகரிக்கிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் அறிக்கைகள் இத்துறை அலுவலர்களால் முறையாகத் தொகுக்கப்படுகின்றன. இந்த முன்னேற்ற அறிக்கைகள் ஆய்வுக் கூட்டங்களுக்கு அடிப்படை விவரங்களாக அமைகின்றன.

**(இ) உயர்நிலை கண்காணிப்புக் குழு:**

அரசின் சிறப்புத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் உயர்நிலை கண்காணிப்புக் குழு ஒன்று அரசால் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | அலுவலரின் பதவி | நிலை |
|---|---|---|
| 1 | அரசு தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2 | அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 3 | அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | உறுப்பினர் – செயலர் |
| 4 | தொடர்புடைய துறைகளின் அரசு முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள் | உறுப்பினர்கள் |

இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழு, முதன்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் விவரங்கள் குறித்து விவாதிப்பதுடன், பிரச்சினைகள் ஏதேனும் இருப்பின் அது குறித்தும் முடிவு செய்கிறது. பொதுவாக மாதத்திற்கு ஒருமுறை கூட்டப்படும் உயர்நிலை கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களில் முதன்மைத் திட்டங்களின் தற்போதைய நிலை, செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் பிரச்சினைகள் போன்றவை விரிவாக விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டத்தில் நடைபெறும் விவாதங்கள், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்களின் கருத்துக்களின் அடிப்படையில் கொள்கை அளவிலான மாற்றங்கள் மற்றும் முதன்மைத் திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள் மேன்மைப்படுத்தப் படுகின்றன.

## (ஈ) மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:

மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டங்களின் செயல்பாட்டினை கண்காணிப்பதற்கென மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் தொடர்பு அலுவலர்களாக மாவட்ட ஆட்சியர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த தொடர்பு அலுவலர்கள் பிற துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றவும், பின்புல தகவல்களைப் பெற்றிடவும் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மாவட்டங்களில் மையப் பொறுப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். இத்துறையின் அலுவலர்கள், கள ஆய்வு மேற்கொள்ளும்போது மாவட்ட தொடர்பு அலுவலர்கள் தேவையான உதவிகளை வழங்குகின்றனர்.

**(உ) கள ஆய்வுகள்:**

மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன்கள் குறித்து இத்துறையின் அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டு அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பிக்கின்றனர்.

**(ஊ) மண்டல ஆய்வுக் கூட்டங்கள்:**

அரசின் முதன்மைத் திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட பிற திட்டங்களின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டங்கள், மண்டல அளவில் மாவட்ட ஆட்சியர்களுடன் நடத்தப்படுகின்றன. இதுபோன்ற மண்டல ஆய்வுக்கூட்டங்களில் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் திட்டங்கள் செயல்படுத்தப்படும் நடைமுறைகள் குறித்த விரிவான கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு பயன்பெறுகின்றனர்.

வழங்கப்படும் சேவையின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு கள அளவிலான பிரச்சினைகள்/ திட்டங்களில் மாறுதல்கள் / முன்னேற்றங்கள் ஆகியன குறித்து மாவட்ட அலுவலர்கள் எடுத்துரைப்பதற்கு மண்டல ஆய்வுக் கூட்டங்கள் வழிவகை செய்கின்றன.

## 3.4. கண்காணிப்பு அலுவலர்கள்:

அரசுச் செயலாளர்கள்/சிறப்புச் செயலாளர்கள்/ கூடுதல் செயலாளர்கள்/ கூடுதல் தலைமைச் செயலாளர்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. இந்த மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் மாதந்தோறும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, பல்வேறு திட்டங்கள் குறிப்பாக முதன்மைத் திட்டங்கள் குறித்து களஆய்வு மேற்கொண்டு திட்டங்கள் விரைவாக செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும்,

தீர்வுகளையும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்கி வழிவகை செய்கின்றனர்.

மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், துறைகளுக்கிடையேயான பிரச்சினைகளைக் களைவதற்கு துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு நடைமுறையிலுள்ள பல்வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்புத் தன்மைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசு அளவில் மேற்கொள்ளப்படவேண்டிய கொள்கை அளவிலான மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைகளை அளிக்கின்றனர். பொதுமக்களின் பெருகிவரும் எதிர்பார்ப்புகள் மற்றும் களஅளவிலான தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கொள்கைகளைத் தொடர்ந்து ஆய்வு செய்திட தற்போதைய நடைமுறை ஏதுவாக உள்ளது. கண்காணிப்பு அலுவலர்கள், திட்டங்கள் வாரியாக முக்கியமான கருத்துக்கள், எடுக்கப்பட

வேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாறுதல்கள் ஆகியவை குறித்த பரிந்துரைகளை அளிக்கின்றனர். கண்காணிப்பு அலுவலர்களால் அளிக்கப்படும் பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

2011 ஆம் ஆண்டு அரசால் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை உருவாக்கப்பட்டு பின்வரும் இரண்டு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(i) மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் மற்றும்

(ii) மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்குதல்.

அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைக் கண்காணிப்பதுடன் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் நடப்பாண்டில் இத்துறையால் செயல்படுத்தப்படும்.

## 4.1. மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்:

தேசிய மற்றும் பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதோடு, வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் பெருமளவில் பெற்று வருகின்றது. இந்த நவீன தகவல் யுகத்தில், கணினித் திறன், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இன்றியமையாததாக விளங்குகிறது. ஏனெனில், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) உலக அளவில் சமூக பொருளாதார மாற்றத்திற்கான நுழைவாயிலாக உள்ளது. இருப்பினும், நகர்ப்புற

மற்றும் கிராமப்புற பகுதிகளுக்கிடையேயும், கணினிப் பெற்றிருப்போர் மற்றும் கணினி இல்லாதவர்களிடையேயும் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப இடைவெளி உள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்ப இடைவெளியைக் குறைப்பதற்காக, தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு அரசு **2011–12**ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் பொருளாதார மற்றும் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள், கணினி தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குவதற்கும், அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கல்வி

அறிவில் உள்ள இடைவெளியைக் குறைப்பதுடன் சமநிலையில் போட்டியிட தகுந்த தளத்தினை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்ட இந்த திட்டம் நாட்டிலேயே ஒரு முன்னோடித்திட்டமாக திகழ்கின்றது.

மாணவர்கள், தொழில்நுட்பத்தின் சமீபத்திய கண்டுபிடிப்புகளை அறிந்துகொள்வதையும், கணினிகளில் அறிவுத்திறன் பெற்று அவர்கள் வேலைவாய்ப்பு போட்டிகளில் வெற்றி பெற்றிடுவதையும் இந்த அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தின் வாயிலாக, மாநில அரசின் கல்விக் கொள்கை சம்பந்தப்பட்ட மூன்று முக்கிய அம்சங்களான அணுகுதல், பங்கேற்பு, வெற்றி பெறல் ஆகியவற்றிற்கு இந்த அரசு வழி அமைத்துக் கொடுத்துள்ளது.

**2011–12** மற்றும் **2012–13** ஆண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள்,

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. **2013–14**ம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைகின்றனர்.

## ஆண்டுவாரியாக / கல்வி நிறுவனங்கள் வாரியாக மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல்

| ஆண்டு | பள்ளிகள் | கலை/ அறிவியல் கல்லூரிகள் | பொறியியல் கல்லூரிகள் | பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் |
|---|---|---|---|---|
| 2011–12 | 12–ம் வகுப்பு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு | இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு |
| 2012–13 | 12–ஆம் வகுப்பு | மூன்றாம் ஆண்டு | இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு |
| 2013–14 முதல் | 12–ஆம் வகுப்பு | – | – | முதலாம் ஆண்டு |

‘தமிழ்நாடு மின்னணு நிறுவனம்’ (ELCOT) இத்திட்டத்தின் கீழ் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யும் பணிக்கான முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. 2011–12 மற்றும் 2012–13 ஆகிய ஆண்டுகளுக்கான மடிக்கணினிகள், தொடர்புடைய துறைகளான பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலமாக வழங்கப்பட்டன. 2013–14ம் ஆண்டு முதல் மடிக்கணினிகள் பள்ளிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற மடிக்கணினிகள் “Windows 7” தொடக்கம் (Starter) மற்றும் உயர் கணினி பயன்பாடு வளர்ச்சி மையத்தின் BOSS LINUX ஆகிய இரட்டை தொடக்க வசதி உடையதாகவும், தமிழ் இணைய தொடக்கக் கல்விக் கழகம் மற்றும்

கல்வித் துறைகளின் பாடத்திட்டங்கள் உள்ளடங்கியதாகவும் உள்ளன. பார்வைத் திறன் அற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினிகளில் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. இத்தகைய மடிக்கணினியை வழங்குவதன் மூலமாக மாணவர்கள் அடிப்படை அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள்களான பரவுத்தாள் (Spread Sheet), விளக்கக் காட்சி (Power Point Presentation) மற்றும் சொற்செயலி (Word Processing) ஆகியவற்றை விரைவாக கற்றுக்கொள்ள இயலுகிறது.

இந்த மடிக்கணினிகளுக்கு அதனில் உள்ள மின்கலனையும் சேர்த்து ஓராண்டு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளன. மடிக்கணினிகள் நன்கு செயல்படுவதற்கும்

மற்றும் தொடர் பராமரிப்பை உறுதி செய்யும் பொருட்டும் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்புடைய நிறுவனங்கள் சேவை மையங்களை அமைத்துள்ளன. இவ்வசதிகள் குறித்து மாணவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டமானது இந்தத் தலைமுறை மாணவர்களுக்கு முழு அறிவுசார் வாய்ப்புகளுக்கு வழிவகை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் வேலை தேடத் துவங்கும் காலத்திலேயே நவீன தொழில்நுட்பத்தின் பயன்களை இத்திட்டத்தின் வாயிலாக அவர்களுக்கு அரசு வழங்குகிறது.

மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் ஒரு மாபெரும் வெற்றியை அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணவர்கள் கணினியின் பலதரப்பட்ட பயன்பாடுகளை கண்டறிந்து

அதனை உபயோகித்துக்கொள்ள முடிகிறது. குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்கள், குறிப்பாக இளம் தலைமுறையினர் கணினி குறித்த தொழில்நுட்பத்தை அறிந்துகொள்வதற்கும், இயக்குவதற்கும் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர் என்பதும் தெரிய வருகிறது.

இந்த வளர்ச்சியானது எதிர்காலத் தலைமுறையினர் கணினி தொழில்நுட்ப கல்வியறிவிற்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும் மற்றும் கணினி தொழில்நுட்ப உலகின் அபரிமிதமான வாய்ப்புகள் மூலம் உலக அளவில் திகழவும் வழிவகை செய்துள்ளது.

குடும்பத்தின் இளம் தலைமுறையினர் இதன்மீது கொண்டுள்ள ஆர்வம் சமூகத்தில் நிகழவிருக்கும் ஒரு மாற்றத்தின் அறிகுறியினை இத்திட்டம் வெளிக்கொணர்கிறது.

மொத்தத்தில், மாணவர்கள் மடிக்கணினியை ஒரு கருவியாக மட்டும் பார்க்காமல், ஏற்றமிகு எதிர்காலத்திற்கான சாளரமாகவும் மற்றும் அவர்களின் சகாக்கள் மத்தியில் சமூக நிலையை உயர்த்துவதாகவும் கருதுகின்றனர்.

இந்த திட்டம் மாணவர் சமுதாயத்திற்கு திறன் மதிப்பை கூடுதலாக்குவதோடு, காலப்போக்கில் கணினி பயன்பாடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு காலகட்டத்திற்கு மேல் அவர்களின் ‘படைப்புத் திறனை தூண்டுவதற்கு’ ஒரு முன்னோடித் திட்டமாகத் திகழும். இந்த மாற்றமானது இத்திட்டத்தின் நிறைவான வெற்றியின் அடையாளமாக திகழும்.

தமிழக அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதுமையான திட்டங்கள் பிற மாநிலங்களால்

பின்பற்றப்படுவதைப்போல இத்திட்டமும் பின்பற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2011–12** முதல் **2015–16** ஆண்டுகள் வரை **31.78** இலட்சம் மடிக்கணினிகள் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் **2016–17**ம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். உத்தேசமாக **5.35** இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ளனர். இதற்கென நிதிநிலை அறிக்கையில் ரூ.**890.00** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்

மகளிருக்கு வீட்டுப் பணிகளை எளிதாக்கவும், வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் பங்கேற்று வளம்

பெறச்செய்யவும் அரசு மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டரை ஒரு தொகுப்பாக வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.

இத்திட்டன் கீழ் **2011–12** முதல் **2015–16** ஆண்டுகள் வரை **1.75** கோடி மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் அடங்கிய தொகுப்புகள் மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 4.3 நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning - ERP)

இந்தத் துறையால் செயல்படுத்தப்படும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மடிக்கணினிகள் மாணவர்களுக்குச் சென்றடைவதைக் கண்காணிக்க நிறுவன வளத் திட்டமிடல் குறித்த ஒரு உயரிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மேலாண்மை மென்பொருள், நிறுவனத்தின்

அனைத்து பணிகளையும் ஒருங்கே நிர்வகிக்க உதவுகிறது. இந்த நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள், பொருட்கள் வாங்குதல், வழங்குதல் மற்றும் விநியோகித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கே உள்ளடக்கிய ஒரு மென்பொருளாகும். மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்காக இந்த மென்பொருள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் (எல்காட்) உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) ஆகியவற்றில் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்கு இம்மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது.

## 5. முடிவுரை:

தமிழ்நாட்டில் பல்வேறு நலத்திட்டங்கள் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்படுவதன் மூலம் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை எளிய மக்களின் வாழ்வில் மாபெரும் தாக்கமும், மாற்றமும் ஏற்பட்டுள்ளன.

அரசின் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதின் மூலம் மாநிலத்தில் ஆரோக்கியமான தாய்மார்கள் ஆரோக்கியமான மகவை பெற்றிடுவதை உறுதி செய்தல், மாணவ/மாணவியர்களது திறன் மற்றும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல், ஏழை எளியோருக்கு வாழ்வாதாரங்களை வழங்கி அவர்களது வருமானத்தைப் பெருக்குதல், ஊரக ஏழை மக்களுக்கு சுற்றுச்சூழலுக்குத் தகுந்த வீடுகள், சமுதாயத்தில், கைம்பெண்கள் மற்றும் நலிவடைந்தோருக்கு உதவுதல் மற்றும்

தேவையுள்ள அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு போன்ற சிறப்புத் திட்டங்கள் ஆதாரமாக விளங்குகின்றன. தொடர் மற்றும் நீடித்த கண்காணிப்பின் வாயிலாக பல்வேறு அரசு திட்டங்களின் செயல்திறன்களை மேம்படுத்துவதற்கு வலுவான மற்றும் அத்தியாவசிய கட்டமைப்பினை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை வழங்கி வருகிறது.

தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகள் பல்வேறு திட்டங்களை கண்காணிப்புக்கு பயன்படுத்துவதற்காக சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை எளிதான மற்றும் பயன்படுத்துவோருக்கு உபயோகமாக உள்வலைய தள மென்பொருளினை வடிவமைத்துள்ளது. திட்டங்களை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை இத்துறை கண்டறிவதன் வாயிலாக திட்ட செயல்பாட்டின் திறனை அதிகப்படுத்தவும்,

எளிமைப்படுத்தவும், நிர்வாகத் திறன் தரத்தை உயர்த்தவும் இயலுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு மற்றும் எழுச்சியூட்டும் தலைமையின் கீழ் சமுதாயத்தின் பல்வேறு சமூகத்தினரின் நலனுக்காக உருவாக்கப்பட்ட முன்னோடித் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதை சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறது.

**எஸ். பி. வேலுமணி**
**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி**
**மற்றும்**
**சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கினார் – திருச்சி மாவட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு
விலையில்லா மடிக்கணினிகள் வழங்கினார் – திருவள்ளூர் மாவட்டம்





**மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்குதல்**

**தேனி மாவட்டம்** **சேலம் மாவட்டம்**





மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்குதல்

மதுரை மாவட்டம்

நாமக்கல் மாவட்டம்






மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்குதல்

கோயம்புத்தூர் மாவட்டம்


விருதுநகர் மாவட்டம்

# கண்காணிப்பு செயல்முறை – விளக்கப்படம்



## மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

மாணவர்களின் எண்ணிக்கை (2011–12 முதல் 2015–16 வரை) – 31.78 இலட்சம்



## மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

### மாவட்ட வாரியாக மாணவர்களின் எண்ணிக்கை

### (2011-12 to 2015-16) - 31.78 இலட்சம்

